# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டு பரீட்சை – 2022

| தரம் - 09 | கர்நாடக சங்கீதம் | நேரம்: 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................................

**பகுதி - I**

**01. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

01. பின்வருவனவற்றுள் சாஸ்திரிய இசையாக அமைவது,
 1) கீர்த்தனை 2) ஸ்வரவரிசை 3) அலங்காரம் 4) கீதம்

02. பாடல் ஒன்றை ஆக்கம் செய்து மெட்டமைத்தல் என்பது,
 1) இரசித்தல் 2) செய்முறை 3) அறிமுறை 4) ஆக்கத்திறன்

03. ஒரு அலங்காரத்தில் இடம்பெறும் மொத்த ஆவர்த்தனங்களின் எண்ணிக்கை.
 1) 15 2) 13 3) 10 4) 12

04. அலங்காரம் பாடப்படும் இராகம்
 1) சங்கராபரணம் 2) மாயாமாளவகௌளை
 3) சுத்தசாவேதி 4) மோகனம்

05. ஹரிகாம்போதி இராகத்தின் மேள எண்.
 1) 15 2) 29 3) 22 4) 28

06. “ஸ்ரீராம...” என்ற உருப்படியின் வகை.
 1) கீர்த்தனை 2) திவ்வியநாமக்கீர்த்தனை
 3) கீதம் 4) ஸ்வரஜதி

07. “ஒடுங்கும் பிணி...” என்ற தேவாரத்தின் பண்.
 1) பூபாளம் 2) செந்துருத்தி
 3) பழந்தக்க ராகம் 4) முல்லை

08. திரியாங்கங்களை எடுத்துக்கொள்ளும் தாளம்.
 1) திரிபுடை 2) ஜம்பை 3) ரூபகம் 4) மட்டியம்

09. “வாசரவணனே...” என்ற கீதத்தில் துதிக்கப்படும் கடவுள்.
 1) சரஸ்வதி 2) சிவன் 3) விஸ்ணு 4) முருகன்

10. மிஸ்ரஜாதி ஜம்பைதாள அலங்காரத்தை இயற்றியவர்.
 1) பொன்னையாபிள்ளை 2) புரந்தரதாஸர்
 3) சம்பந்தர் 4) தியாகராஜர்

11. அங்க வித்தியாசமற்ற உருப்படி
 1) கீதம் 2) ஜதீஸ்வரம் 3) கீர்த்தனை 4) வர்ணம்

12. திவ்வியநாமக் கீர்த்தனைகளை இயற்றியவர்
 1) புரந்தரதாஸர் 2) பொன்னையாபிள்ளை
 3) மாணிக்கவாசகர் 4) தியாகராஜர்

13. பேதமற்ற ஸ்வரங்கள்
 1) ஸ, த 2) நி, ப 3) க, ம 4) ஸ, ப

14. “வாசரவணனே...” என்ற கீதம் அமைந்த இராகம்
1) ஸஹானா 2) சங்கராபரணம் 3) ஹரிகாம்போதி 4) மாயாமாளவகௌளை

15. “சந்தனத்தையே அரைத்து...” என்ற காவடிச்சிந்து பாடப்படும் தாளம்
1) ரூபகம் 2) ஆதி 3) திஸ்ர நடை 4) ஏகம்

16. 12 ஸ்வரஸ்தானங்களில் நான்காவது ஸ்வரஸ்தானம்
1) சாதாரணகாந்தாரம் 2) பஞ்சமம்
3) சுத்தரிஷபம் 4) சுத்தமத்திமம்

17. அடதாளத்தின் முதல் லகுவை நீக்கினால் வரும் தாளம்
1) ரூபகம் 2) திரிபுடை 3) ஜம்பை 4) துருவம்

18. வைதீக கானத்தைச் சேர்ந்த உருப்படி
1) கீதம் 2) பதம் 3) கீர்த்தனை 4) வர்ணம்

19. ஹிந்துஸ்தானி இசையில் பைரவதாட் என்று அழைக்கப்படும் இராகம்.
1) சங்கராபரணம் 2) ஸஹானா 3) ஆரபி 4) மாயாமாளவகௌளை

20. அப்பியாச வரிசைகளை இயற்றியவர்.
1) புரந்தரதாஸர் 2) தியாகராஜர் 3) அருணகிரிநாதர் 4) வீரமணிஐயர்

(20x2 = 20 புள்ளிகள்)

## பகுதி - II

❖ **எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

**01.** 01. ஜகை இராகங்கள் எத்தனை?
02. ஜகை இராகங்களின் மறுபெயர்கள் 4 தருக.
03. ஜகை இராகத்தின் 4 இலட்சணங்களையும் எழுதுக.

(3+4+8 = 15 புள்ளிகள்)

**02.** 01. கீர்த்தனைக்கு நான்கு உதாரணம் தருக.
02. கீர்த்தனை இயற்றிய வாக்கேயகாரர் நால்வரைக் குறிப்பிடுக.
03. கீர்த்தனை பற்றி சுருக்கமாக விளக்குக.

(4+4+7 = 15 புள்ளிகள்)

**03.** 01. அக்னி - கோ என்று அழைக்கப்படும் இராகம் எது? அதன் மேள எண் யாது?
02. அதன் ஆரோகண அவரோகணத்தைத் தருக.
03. அந்த இராகத்திற்கு தேவார இசையில் வழங்கப்படும் பெயர் யாது?
04. அந்த இராகத்திலமைந்த உருப்படிகள் இரண்டு தருக.
05. அவ்விராகத்தின் ஸ்வரஸ்தானங்களை ஒழுங்காக எழுதுக.

(2+2+2+2+7 = 15 புள்ளிகள்)

**04.** ஸப்த தாளங்களையும் அவற்றின் அங்க அடையாளங்களையும் அட்டவணைப்படுத்துக.

(15 புள்ளிகள்)

**05.** நீர் கற்ற ஜம்பை தாள அலங்காரத்தை இராகம், தாளம், இயற்றியவர், அங்க அடையாளங்கள் என்பவற்றைக் குறிப்பிட்டு எழுதுக.

(15 புள்ளிகள்)

**05.** ஆலயங்களுடன் இசை தொடர்புபட்டிருக்கும் விதத்தினை விரிவாக விளக்குக.

(15 புள்ளிகள்)